SUTHANTHIRA THIRUNAAL AMUDHA PERUVIZHA
TAMIL NADU

சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

வாய்மையே வெல்லும்

**சுருக்கம்**

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்ட திருமதி. இ.சரளாதேவி பணியினை வரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**கால்நடை பராமரிப்பு, பால்வளம் மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (மீன்–2) துறை**

அரசாணை (2டி) எண்.24

நாள் 03.12.2021
திருவள்ளுவர் ஆண்டு 2052
கார்த்திகை – 17

**படிக்கப்பட்டன :-**

1) அரசாணை (நிலை)எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ1) துறை, நாள் 23.01.2020.
2) ஆணையர், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அவர்களின் கடித ந.க.எண்.9415/எம்.5/2020, நாள் 31.08.2021.

-----

**ஆணை:**

மேலே இரண்டில் படிக்கப்பட்ட மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையரின் கடிதத்தில், விழுப்புரம் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் மீன்வள மேற்பார்வையாளர் தரம்–II ஆக பணிபுரிந்த அ.இளங்கோவன் 10.02.2020 அன்று பணியிடை மரணமடைந்ததையடுத்து, அவரது மனைவி திருமதி. இ.சரளாதேவி என்பவர் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குமாறு விழுப்புரம், மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் அளித்த 16.03.2020 நாளிட்ட விண்ணப்பமானது, அரசு ஊழியர் இறந்த மூன்றாண்டுகளுக்குள் அளிக்கப்பட்டது என்றும், திருமதி. இ.சரளாதேவி பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்ததையடுத்து, போதிய வயது வரம்பை பூர்த்தியடைந்ததையடுத்தும் காலஞ்சென்ற அரசுப் பணியாளரின் குடும்பத்தில் பொருள் ஈட்டுபவர் வேறு எவரும் இல்லை என்றும், அவரது குடும்பம் வறிய நிலையில் தான் உள்ளது என விருத்தாசலம் வருவாய் வட்டாச்சியர் சான்றளித்துள்ளதன் அடிப்படையிலும், திருமதி. இ.சரளாதேவி என்பவரை கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளராக மீன்வளத்துறை ஆணையர் அலுவலகத்தில் தற்காலிகமாக பணிநியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகிறார் என்றும், பணி நியமன நாளில் அவரது வயது 37 ஆண்டுகள் எனத் தெரிவித்து, கருணை அடிப்படையில்

தமிழ்நாடு அமைச்சுப் பணியில் மீன்வளத் துறையில் தற்காலிகமாகப் பணியமர்த்தப்பட்ட திருமதி. இ.சரளாதேவி என்பவரது பணியினை தனியர் பணியில் சேர்ந்த நாளான 04.01.2021 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. மேற்காணும், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்க முடிவு செய்து, கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் மீன்வளத்துறை ஆணையர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக 04.01.2021 முற்பகல் முதல் தற்காலிகமாகப் பணி நியமனம் செய்யப்பட்ட திருமதி. இ.சரளாதேவி என்பவர் அப்பணியிடத்திற்கு தேவையான உடற் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அன்னாரது பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 04.01.2021 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி அரசு ஆணையிடுகிறது.

3. திருமதி. இ.சரளாதேவி, இளநிலை உதவியாளரின் பணியானது அவர் பணியமர்த்தப்பட்ட நாளான 04.01.2021 முற்பகல் முதல் வரன்முறை செய்யப்படுவதால், அவர் வருடாந்திர ஊதிய உயர்வு உரிய விதிகளின்படி பெறத் தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறையின் அ.சா.எண்.19333/க்யூ.1/2021-1, நாள் 15.11.2021 மற்றும் மனிதவள மேலாண்மை துறையின் அ.சா.எண்.35634/ஜி.2/2021-1, நாள் 25.11.2021 பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தெ.சு.ஜவகர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்

ஆணையர், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, சென்னை- 35.
திருமதி. சரளாதேவி, இளநிலை உதவியாளர்,
(மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மூலமாக)

<u>நகல்</u>

மாண்புமிகு அமைச்சர் (மீன்வளம் மற்றும் மீனவர் நலன் மற்றும் காலநடை பராமரிப்பு) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை - 9.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை, சென்னை - 9.
மனித வள மேலாண்மை துறை, சென்னை - 9.
கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை அரசு கூடுதல் தலைமை செயலாளரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
இருப்புக்கோப்பு / உதிரிகள்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

S. Thiru 6/12/21
பிரிவு அலுவலர்
06.12.2021